பட்டு வளர்ச்சியில் கடந்த இரண்டாண்டுகளில் கழக ஆட்சியில் பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக நடத்தி – தற்போது

# பட்டுநூலை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

## சட்டப்பேரவையில் - பட்டு வளர்ச்சி - கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பெருமிதம்!

**சென்னை, ஏப். 22-**

**சட்டப்பேரவையில் - பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் தா.மோ.அன்பரசன். “பட்டு வளர்ச்சியில் கடந்த இரண்டாண்டுகளில் கழக ஆட்சியில் பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக நடத்தி, தற்போது பட்டு நூலை அதிகளவில் உற்பத்தி செய்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் திகழ்ந்து கொண்டிருக்கிறது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அளித்த பதிலுரை வருமாறு:**

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பட்டு வளர்ச்சியில் கடந்த இரண்டாண்டுகளில் கழக ஆட்சியில் பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக நடத்தி, தற்போது பட்டு நூலை அதிகளவில் உற்பத்தி செய்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### 800 விவசாயிகளுக்கு ரூ.9.60 கோடி மானியம்!

பட்டு உற்பத்தியானது, முதன் முதலில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் துவங்கி, தற்பொழுது சென்னையை தவிர்த்து தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மல்பெரி நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு 3,500 ஏக்கருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை, நம்முடைய கழக ஆட்சியில் 5,000 ஏக்கராக உயர்த்தி கடந்த 2 ஆண்டுக் காலத்தில் 6 ஆயிரத்து 361 பட்டு விவசாயிகளுக்கு ரூ.10 கோடியே 50 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. “பட்டுப் புழு வளர்ப்பு மனைக்கான” மானியம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், ரூ.87,500/ ஆக இருந்தது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ரூ.1 லட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி, இந்த இரண்டாண்டுகளில் 800 விவசாயிகளுக்கு ரூ.9 கோடியே 60 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன் விளைவாக, கடந்த 2 ஆண்டு களில் மட்டும் மல்பெரி நடவு பரப்பு 11 ஆயிரத்து 583 ஏக்கர் அதிகரித்து, தற்போது தமிழ்நாடு முழுவதும் 56 ஆயிரம் ஏக்கராக பயிரிடப்பட்டு வருகிறது என்பது மிகப் பெரிய சாதனையாகும்.

பட்டுத் தொழிலில் நீண்ட காலம் ஈடுபட்டு வரும் முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு Power tiller இயந்திரம் வழங்க வேண்டும் என்ற தொடர் கோரிக்கையினை ஏற்று, நம்முடைய முதல்வர் அவர்கள் கழக ஆட்சியில் எல்லாம் அந்த நிலை இல்லை. முதல்வர் அவர்கள் வழங்கலாமென்று உத்தரவிட்டு இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 500 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 75 இலட்சம் அந்த Power tiller இயந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. கழக அரசு பொறுப்பேற்றது முதல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள்மூலம், 10 ஆயிரத்து 216 பயனாளிகளுக்கு இது வரை ரூ.39 கோடியே 55 லட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது. கழக அரசு செயல்படுத்திய இந்த சிறப்பான திட்டங்களினால் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த மாநிலத்தின் பட்டு உற்பத்தி, இன்றைக்கு இந்த 2 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 589 மெட்ரிக் டன் ஆக உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### பூம்புகார் - 50ஆம் ஆண்டு பொன்விழா!

அதேபோன்று, பூம்புகார் நிறுவனம் தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்திடவும், கலை பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட வேண்டுமென்ற நல்ல நோக்கில், மறைந்தாலும் நம்முடைய இதயங்களில் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற, தலைவர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு பொதுத் துறை நிறுவனமாக “பூம்புகார்” என்ற பெயரில் துவக்கப்பட்டது. தற்போது, 7 உற்பத்தி நிலையங்கள் மற்றும் 22 விற்பனை நிலையங்களுடன் தனது 50 ஆம் ஆண்டு பொன் விழாவை இன்றைக்குக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.23 கோடி விற்பனை செய்த பூம்புகார் நிறுவனம், கழக அரசு பொறுப்பேற்ற பின் அதன் விற்பனை ரூ.47 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஆக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் ரூ.70 கோடி மதிப்பிலான கலைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல, கைவினைஞர்களை ஊக்கப்படுத்த, இந்தியாவிலேயே அதிக கைவினைஞர்களுக்கு அதிகமாக விருதுகள் வழங்குகிற மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். இதிலே 263 விருதுகளை கலைஞர்களுக்கு வழங்கி கௌரவித்துக் கொண்டிருக்கிறோம்.

### கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு!

நலிந்த கைவினைத் தொழில்களுக்கு உதவிடும் விதமாக காஞ்சிபுரம் மாவட்டம் -கலியனூர், விழுப்புரம் மாவட்டம்-விக்கிரவாண்டி, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம், பத்தமடை, சேலம் மாவட்டம்-தம்மம்பட்டி, பெரம்பலூர் மாவட்டம் - அரும்பாவூர், ஈரோடு மாவட்டம்ஆசனூர் ஆகிய 7 இடங்களில் ரூ.3 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் முதல்வர் அவர்களால் கடந்த 1342022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. ஆக, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கள்ளக்குறிச்சி-மரச்சிற்பம், கருப்பூர்-கலம்காரி ஓவியம், தஞ்சாவூர்-நெட்டி வேலை, அரும்பாவூர்-மரச்சிற்பம், கன்னியாகுமரி மயிலாடி கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, நம்முடைய இந்த 2 துறையும் நம்முடைய கதர் மற்றும் கிராமத் தொழில்களில் வருகிற துறை. சிறிய துறை. இதுவரையில் யாரும் இன்றைக்கு காலையில் ஓர் உறுப்பினர்கூட இந்தத் துறை குறித்து யாருமே பேசவில்லை. ஆக, இன்றைக்கு இந்தத் துறையின் மூலமாக சில அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

பட்டு வளர்ச்சித் துறை அறிவிப்புகள்

**1.தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 1500 பட்டு விவசாயி களுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 15 கோடியே 68 இலட்சத்து 75 ஆயிரம் உதவித்தொகை! வழங்கப்படும்**

பட்டுப்புழு வளர்ப்பிற்கு உகந்த தட்பவெப்ப சூழ்நிலைகளைப் பராமரித்து சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, தரமான பட்டுக்கூடுகள் அறுவடை செய்திடும் வகையில், 2023 2024 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைத்து பயன்பெறும் வகையில், 1,500 பட்டுப் புழு வளர்ப்பு மனைகளுக்கு மொத்தம் ரூபாய் 15 கோடியே 68 இலட்சத்து 75 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்.

> **தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 1500 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 15 கோடியே 68 இலட்சத்து 75 ஆயிரம் உதவித்தொகை!**

**2. 6,500 ஏக்கரில் அதிக மகசூல் தரும் மல்பெரி ரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும்**

அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு

20232024 ஆம் ஆண்டில், 6,500 ஏக்கருக்கு ஊக்கத்தொகை வழங்கிட மொத்தம் ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

**3. பட்டுக் கூடுகளின் தரத்தை அதிகரிக்க 2,000 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 6 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்கப்படும்**

பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட 2023-2024ஆம் ஆண்டில், 2,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் ரூபாய் 6 கோடியே 81 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**4.மாநிலத்தில் பட்டு நூற்புத்தொழிலை விரிவுபடுத்தி தரமான பட்டுநூல் உற்பத்தியை ஊக்குவித்திட, 2000 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பாலை ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்**

மாநிலத்தின் பட்டுநூற்புப் பிரிவினை விரிவுபடுத்தி தரமான பட்டுநூல் உற்பத்தியை ஊக்குவித்திடவும், நமது மாநில பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை மாநிலத்திற்குள்ளாகவே கொள்முதல் செய்து பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கச் செய்திடும் நோக்கத்திலும், ரூபாய் 5 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில்



2,000 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பாலை நிறுவப்படும்.

**5. 300 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்படும்**

முன்னோடி பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 20232024 ஆம் ஆண்டில், 300 முன்னோடி பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், பவர் டில்லருக்கு தலா ரூபாய் 35,000/வீதம், 300 பவர் டில்லர்கள் ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**6. நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு பட்டுப் பண்ணையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சி பயிற்சி மற்றும் சுற்றுலா வளாகம் அமைக்கப்படும்**

அனைத்து பட்டுவளர்ச்சி செயல்பாடுகளையும், பட்டு விவசாயிகள் பட்டு தொழில்முனைவோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் என அனைவரும் ஒரே இடத்தில் அறிந்து கொண்டு பயன்பெறும் நோக்கில், நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு பட்டுப் பண்ணையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் “ஒருங்கிணைந்த பட்டுவளர்ச்சி பயிற்சி மற்றும் சுற்றுலா வளாகம்” அமைக்கப்படும்.

**7. 1000 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் பட்டு வளர்ப்பு குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்**

புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி தோட்டப் பராமரிப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி வழங்கிட ஏதுவாக, 20232024 ஆம் ஆண்டில், ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் 1000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுத் தொழில் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்.

**8. நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து பட்டு விவசாயிகளுக்கு வழங்கிட ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) நிறுவப்படும்**

நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திடும் வகையில், ரூபாய் 2 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் (வித்தகம்) தனியார் தொழில்முனைவோர்மூலம் நிறுவப்படும்.

**9. சேலம் மாவட்டம் ஏற்காட்டில் அமைந்துள்ள பட்டு சுற்றுலா மையத்தில், பட்டு வளர்ச்சித் துறை மற்றும் அறிவியல் சார்ந்த பொழுதுபோக்கு செயல்பாடுகளை விரிவுபடுத்துதல், பட்டுத் துணிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் சார்ந்த விற்பனை மையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

2023-2024 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம் ஏற்காட்டில் அமைந்துள்ள ‘பட்டு உலகம்’ என்ற பட்டு சுற்றுலா மையத்திற்கு, வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அனைத்து பட்டு வளர்ச்சி செயல்பாடுகளையும் அறிந்து கொள்வதோடு, அறிவியல் சார்ந்த பொழுதுபோக்கு செயல்பாடுகளிலும் ஈடுபடச் செய்யும் நோக்கில், மையத்தில் அறிவியல் சார்ந்த பணிகளை விரிவுபடுத்துதல், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், பார்வையாளர்களுக்கு பயன்படும் வகையிலும் பட்டுத் துணிகள் மற்றும் கைவினைப்பொருட்கள் சார்ந்த விற்பனை மையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**10) 30 விதைக்கூடு உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 37 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பட்டுப் புழு வளர்ப்பு மனைக்கான உதவித்தொகை மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்**

தரமான, நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்கு தேவையான விதைக்கூடுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து அரசு வித்தகங்களுக்கு வழங்கிடும் நோக்கில், 20232024 ஆம் ஆண்டில் 30 விதைக்கூடு உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு, ரூபாய் 37 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் விதை பட்டுப்புழு வளர்ப்பு மனைகளை அமைக்க உதவித்தொகையும், பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தும் வழங்கப்படும்.

**11) சேலம் மாவட்டத்தில் இயங்கிவரும் சேலம் அரசு பட்டு நூற்பு அலகில், கூடுதலாக 2 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும், ஒரு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட ரூபாய் 26 இலட்சத்து 26 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்**

அரசு பட்டுநூற்பு அலகுகளை வலுப்படுத்தி, தரமான கச்சாப்பட்டு / முறுக்கேற்றிய பட்டுநூல் உற்பத்தியை அதிகரித்திடும் நோக்கத்தில், 20232024 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் சேலம் அரசு பட்டு நூற்பு அலகில் கூடுதலாக 2 பலமுனை பட்டுநூற்பு அலகுகளும், ஒரு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட ரூபாய் 26 இலட்சத்து 26 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்.

**12) கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி மைய வளாகத்தில் உள்ள, அரசு பட்டுக்கூடு அங்காடி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

பட்டு விவசாயிகள் தங்களது பட்டுக் கூடுகளை விற்பனை செய்வதற்காக வெளிமாநில பட்டுக்கூடு அங்காடிக்கு எடுத்துச் செல்வதைத் தவிர்த்திடவும், வெளிமாநிலங்களில் பட்டுநூற்பு உரிமம் பெற்றுள்ள பட்டு நூற்பாளர்களை, ஓசூர் அரசு பட்டுக்கூடு அங்காடியில் ஏல முறையில் பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்ய அனுமதிப்பதன்மூலம் விவசாயிகளுக்கு பட்டுக்கூடு களின் தரத்திற்கேற்ப கூடுதல் விலை கிடைப்பதோடு, அவர்களது போக்குவரத்து நேரமும் குறையும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி மைய வளாகத்தில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடியில் பட்டுக்கூடு பரிவர்த்தனையை அதிகரித்திட, பட்டுக்கூடு அங்காடி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

> **6,500 ஏக்கரில் அதிக மகசூல் தரும் மல்பெரி ரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் ஊக்கத்தொகை**

13)1,000 பட்டு விவசாயிகளுக்கு, ரூபாய் 12 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பட்டுப் புழு வளர்ப்பு நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்

பட்டுப்புழு வளர்ப்பில் சீரான நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்றி, தரமான பட்டுக்கூடு அறுவடையை உறுதி செய்திட, 20232024 ஆம் ஆண்டில், 1,000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் ரூபாய் 12 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**14)பட்டு விவசாயிகளுக்கு சேவைகளை விரைந்து வழங்கிட ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள 14 அரசு பட்டுக்கூடு அங்காடிகளுக்குத் தேவையான வசதிகள் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தரப்படும்**

பட்டு வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில், தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், உடுமலை, தாளவாடி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராசிபுரம், சிவகங்கை, தேனி, நன்னகரம், நாகர்கோவில் மற்றும் திருவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில், பட்டு விவசாயிகளுக்குரிய சேவைகளை விரைந்து வழங்கிட ஏதுவாக தேவையான வசதிகள் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தரப்படும்.

**15) பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம் பட்டுப் புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்திட, ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம் புழுவளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும்**

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழு வளர்ப்பில், தரமான மல்பெரி இலைகளை உணவளிப்பதிலும், சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும், சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. இளம் பட்டுப்புழுக்களைப் பெற்று வளர்ப்பதன்மூலம் விவசாயிகள் தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற முடிகிறது. எனவே பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம் பட்டுப் புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்திட ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 2 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்கப்படும்.

**16) மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்**

வெண்பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் 2023-2024 ஆம் ஆண்டில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயி களுக்கு முறையே, ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/ மற்றும் ரூபாய் 50,000/என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

**17) மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்**

2023-2024 ஆம் ஆண்டில் தரமான, நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்கு தேவையான விதைக்கூடுகளை உற்பத்தி செய்து அரசு வித்தகங்களுக்கு வழங்கிடும் நோக்கில், அதிகளவில் தரமான விதைக்கூடுகள் உற்பத்தி செய்யும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், முதல் முறையாக மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/ மற்றும் ரூபாய்5 0,000/என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

**18) மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்**

2023-2024 ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிகளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு மாநில அளவில் முறையே ரூபாய் 1,00,000/, ரூபாய் 75,000/மற்றும் ரூபாய் 50,000/என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

### தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**1. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கு தஞ்சாவூர் ஓவிய கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும்**

பாரம்பரியமிக்க தஞ்சாவூர் ஓவியங்கள் அதிக அளவில் மக்களால் விரும்பப்படுவதாலும், அக்கலையை விரிவுபடுத்த வேண்டியுள்ளதாலும், புதிய வடிவமைப்புகளை உருவாக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கோடு திருவாரூரில், பெண்களுக்கு ரூபாய்

**2.15 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் ஓவிய கைத்திறத் தொழிலில் மூன்று மாத காலப் பயிற்சி அளிக்கப்படும்.**

ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் 10 தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

பாரம்பரியமிக்க கைவினைப்பொருட்களின் தயாரிப்பினை பாதுக்காக்கவும், அப்பொருட்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் நோக்கில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால், கீழ்க்கண்ட 10 தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. கடலூர் (வண்டிபாளையம்) - களிமண் பொம்மைகள், 2.ராணிப் பேட்டை (வாலாஜாபேட்டை) - மூங்கில் மற்றும் பிரம்பு கைவினைப் பொருட்கள், 3.சென்னை (கொசப்பேட்டை) - களிமண்பொம்மைகள், 4.காஞ்சிபுரம் - காகிதக்கூழ் களிமண்பொம்மைகள், 5.மதுரை (கே. புதூர்)- உலோக கைவினைப் பொருட்கள், 6.தென்காசி (காருகுறிச்சி) - களிமண் பொம்மைகள், 7.திருவள்ளூர் (பழவேற்காடு) - பனை ஓலை கைவினைப் பொருட்கள், 8.தென்காசி (அம்பாசமுத்திரம்) - மரவர்ண கடைசல் பொம்மைகள், 9.திருவண்ணாமலை (முடையூர்) -நுண்ணியகற்சிற்ப கைவினைப் பொருட்கள், 10.ஈரோடு (ஆசனூர்) - ஒன்னிக்குச்சி கைவினைப் பொருட்கள்.

**3. ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் புதிய வடிவமைப்புகளுக்கான போட்டிகள் நடத்தப்படும்.**

பழமையான கைத்திறத் தொழிலில் புதுமையை புகுத்தும் நோக்கோடு, கல்லூரி மாணவர்களின் புதிய வடிவமைப்பை உருவாக்கும் திறனை வெளிக்கொணரவும், போட்டிகள் நிறைந்த உலகில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் முயற்சியாக, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில், மின்னிலக்கத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மாணவர்களின் செயல்திறன் மூலம் புதிய வடிவமைப்புகளை உருவாக்க அரசு கவின் கலைக் கல்லூரிகளில் வடிவமைப்பு போட்டிகள் நடத்தப்படும்.

**4) ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் கண்காட்சிகள் நடத்தப்படும்**

கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பொதுமக்கள் கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதியாகவும், இந்தியாவின் 10 முக்கிய நகரங்களில் கைவினைப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள் தலா ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

**5) ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் அடுத்த தலைமுறை கைவினைக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்**

தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரியமிக்க கைத்திறத் தொழிலைப் பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில்,

18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளம் கைவினைக் கலைஞர்களுக்கு பித்தளை விளக்குகள், பஞ்சலோக சிற்பங்கள், மரச்சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத் தட்டுகள் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் ஆகிய கைத்திறத் தொழில்களில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் 5 பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்.

**6) ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்**

கைத்திறத் தொழிலை பாதுகாக்கவும், அக்கலையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும், சந்தையின் தற்போதைய வடிவமைப்பு தேவைகளுக்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகள்/முன்மாதிரிகளை உருவாக்குவதற்கும், பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. எனவே, கருப்பூர் கலம்காரி ஓவியங்கள், களிமண் & சுடுகளிமண் பொம்மைகள், பிரம்பு கைவினைப் பொருட்கள், மரச்சிற்பங்கள், சித்திரத்தை யல் மற்றும் மரவர்ண கடைசல் பொம்மைகள் ஆகிய 6 கைத்திறப் பொருட்களுக்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திறன் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்.

**7)ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கைவினைக் கலைஞர்களுக்கு நவீன தொழில்நுட்ப உபகரணப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்**

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், 500 கைவினைஞர்களுக்கு, ரூபாய் 10,000/ மதிப்பிலான நவீன தொழில்நுட்ப உபகரணப் பொருட்கள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இவ்வாறு தா.மோ.அன்பரசன் பதிலுரையாற்றினார்.